**தலைப்பு 323 – சட்ட அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூன் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி சீராக்கல் மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டுக்கான நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ரூபா 652,892 தொகையான எதிர்மறை பெறுமதியொன்றாக இருந்தது. திருத்தப்பட்ட ACA - 7 படிவத்தில் உள்ள கட்டுநிதி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி சீராக்கல் மீதி ரூபா 652,892 தொகையான எதிர்மறை பெறுமதியொன்றாக இருந்தது. இது ரூபா 652,892 தொகையான நேர்மறை (+) பெறுமதியாக இருந்திருக்க வேண்டிய போதிலும் கட்டுநிதி கணக்கிணக்கக் கூற்றில் உள்ள கட்டுநிதி சீராக்கல் மீதி எதிர்மறை பெறுமதியாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை. 2021.12.30 ஆம் திகதிய SA/MAA/02/01/01 ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை திணைக்களம் தயாரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் தேறிய வருமான பெறுவனவு மற்றும் வருமானமல்லாத பெறுவனவுகளில் இருந்து மொத்த செலவினங்களைக் கழிக்கும் போது, 2021.12.31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் கட்டுநிதி மீதி ரூபா 652,892 தொகையான எதிர்மறை பெறுமதியொன்றாக இருந்தது. மேலும், 2021.12.31 இல் உள்ளவாறான நிதி செயலாற்றல் கூற்றில் உள்ள கட்டுநிதி மீதி 2021.12.31 இல் உள்ளவாறான கட்டுநிதி கணக்கு கூற்றில் (ACA 3) | அரச கணக்குகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 26 அம் திகதிய 2021/03 ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் பகுத்தறிவுடன் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளவாறான கட்டுநிதி மீதியை 0 (பூச்சியம்) எனக் குறிப்பிடுதலானது பகுத்தறிவுடன் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | உள்ள திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரமான மீதியாக இருக்க வேண்டும். அதன் பெறுமதி 0 ஆகும். மேலும், மேலே குறிப்பிட்டுள்ள இலக்கத்தை கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டல்களின் 7.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் கட்டுநிதி மீதி சரியாக உள்ளது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த கொழும்பு பங்கு பரிவர்த்தனை Demutualization சட்டமூலம், பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல் சட்டமூலம், உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம், பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணைகள் கட்டளைச்சட்டம், லேடி லோச்சோர் கடன் நிதிச் சட்டம், இலங்கை காப்புறுதி நிறுவன (கூட்டிணைத்தல்) சட்டமூலம் மற்றும் 2009 இன் 23 ஆம் இலக்க இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவன (திருத்த) சட்டம் என்பன 2021 திசெம்பர் 31 வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | **கொழும்பு பங்கு பரிவர்த்தனை Demutualization சட்டமூலம்**<br>2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டம் 2021.09.21 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன், அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஒரு வருடத்திற்குப் பின்னர் இந்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதால், 2021 ஆம் ஆண்டில் இது சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>**பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல் சட்டமூலம்**<br>உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணைகள் கட்டளைச் சட்டத்தில் மேலும் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. | அங்கீகரிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட சட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | **லேடி லோச்சோர் கடன் நிதி சட்டம்**<br>புதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு வருகிறது.<br><br>**இலங்கை காப்புறுதி நிறுவன (கூட்டிணைத்தல்) சட்டமூலம்**<br>இது ஒரு தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலமாகும்.. சட்ட வரைஞர் மூலம் சட்டமூலத்தில் தேவையான திருத்தங்களைச் செய்து மீண்டும் சமர்ப்பிக்குமாறு பாராளுமன்றம் அறிவித்துள்ளது. எனவே இது குறித்து மேலும் பரிசீலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>**2009 இன் 23 ஆம் இலக்க இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவன (திருத்த) சட்டம்**<br>புதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு வருகிறது. | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் திருத்தப்பட வேண்டிய 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம், 2006 இன் 6 ஆம் இலக்க நிதி கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம், 2006 இன் 5 ஆம் இலக்க பணமோசடி தடுப்புச் சட்டம், 2005 இன் 25 ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பு உடன்படிக்கையை ஒடுக்குதல் சட்டம், 1990 இன் 2 ஆம் இலக்க கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம், 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் சட்டம், கம்பனிகள் சட்டம் மற்றும் கலால் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் போன்ற சட்டங்களில் தொடர்புடைய திருத்தங்கள் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் ஒவ்வொரு வெளி நிறுவனங்களினதும் நோக்கெல்லைக்கு உட்பட்டு வருவதால், குறித்த நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து இறுதி வரைவு தயாரிக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு வருகிறது. | திருத்தம் செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ள சட்டங்கள் உடனடியாக திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு 2021 திசெம்பர் 31 வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை 2021 ஆம் ஆண்டில் நிறுவப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் அது 2021 திசெம்பர் 31 வரையிலும் நிறுவப்பட்டிருக்கவில்லை. | கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையை நிறுவுதல் தொடர்பான இறுதி ஆவணங்கள் தற்போது பரீட்சிக்கப்பட்டு வருகின்றன. இது 02 வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும். | கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை உடனடியாக நிறுவப்பட வேண்டும். |
| (ஈ) | சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்காக சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னைய ஆண்டில் நடைமுறையில் இருந்த 09 கோவைகள் மற்றும் மீளாய்வாண்டில் அனுப்பப்பட்ட 03 கோவைகளின் பணிகள் 2021 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த வருடத்தில் இருந்து காணப்பட்ட 9 கோவைகளில் 07 கோவைகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. எஞ்சிய 02 கோவைகளுக்கு வழக்குகளை தாக்கல் செய்வதற்கு தேவையான ஆவணங்களை சட்டமா அதிபர் திணைக்களம் தயாரித்து வருகின்றதுடன், தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்களை நாங்கள் பரிந்துரைத்து வருகின்றோம். மேலும், மீளாய்வாண்டில் பெறப்பட்ட 03 கோவைகளுக்கு வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக காலத்திற்கு காலம் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருகிறதுடன் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தேவையான தகவல்கள் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்படும். | சட்ட நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட கோவைகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 22 ஆக இருந்த போதிலும், உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஆக இருந்ததால், பதவியணியில் 07 வெற்றிடங்கள் காணப்பட்டன. | • வெற்றிடமாக உள்ள 07 பதவிகளில் பணிப்பாளர் நாயகம் பதவி என்பது அமைச்சரவையால் நியமிக்கப்பட வேண்டிய பதவியாகும். அமைச்சரவையால் பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படும் போது, ஏனைய மீதமுள்ள சாரதி பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். ஏனைய வெற்றிடங்கள் ஏற்கனவே நாளதுவரை நிரப்பப்பட்டுள்ளன. | செயலாற்றலை பாதகமாக பாதிக்கக்கூடிய பதவியணி வெற்றடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |